**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.**

24.10.2025

O.S. No. 276/2022

D.W. 1 திரு.ஆனந்த்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்) -**

முசௌரி பங்களா என்பது நெல் சாப்பாடு போடும் கணக்கு எழுதும் இடம் என்று எதை வைத்து சொல்கிறேன் என்றால் வருவாய் துறை ஆவணங்களில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதை வைத்து சொல்கிறேன். முன்னால் மேலாளரும் சொல்லியுள்ளார். M.P. 2/2012 ல் 2 ஆம் பிரதிவாதி முன்பு விசாரணை நடைபெற்ற போது 3 ஆம் பிரதிவாதி சார்பில் வருவாய் அலுவலர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள பழைய செற்றில்மெண்ட் ரெஜிஸ்டர் தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தும் 2000 மாவது ஆண்டுக்கு பிந்தையது என்றால் சரிதான். இந்த வழக்கில் பி.வா.சா.ஆ. 1 ஆவணம் என்ன காரணத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் அன்றைய தினம் சங்கரன் என்ற நபர் காலையில் கோவிலுக்கு அபிஷேகத்திற்காக வந்தார். அவரிடம் எங்கு தங்கியுள்ளீர்கள் என்று கேட்டோம். அப்போது விஸ்வ ஹிந்து வித்யா கேந்திராவில் தங்கியிருப்பதாக சொல்லி அந்த தொகையை வசூல் செய்தார்கள் என்று சொல்லி பி.வா.சா.ஆ.1ஐ கொடுத்தார். அதனால் தாக்கல் செய்துள்ளோம்.

பி.வா.சா.ஆ. 2 பிராதில் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டுள்ளார்கள். வாதிகளுடைய தாவா சொத்திற்கு முன்னால் இந்து சமய அறநிலையத் துறையால் கடைகள் கட்டப்பட கூடாது என கோரி உறுத்துக்கட்டளை கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 3 பிராதில் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்தின் அமைப்பை கட்டிடங்கள் எதுவும் கட்டி மாற்றக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளையும், தாவா சொத்திற்கு முன்னால் கட்டப்பட்டுள்ள 3 அடி அகலத்திற்கு 60 அடி நீளத்திற்கு உள்ள கட்டிடத்தை அகற்ற வேண்டும் என்று செயல் உறுத்துக் கட்டளையும் கேட்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வழக்குகளும் O.S. 537/2002 ல் இந்த வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு வந்த பிறகு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 8 உத்தரவு தேதி என்ன என்றால் 29.03.2022. இந்த உத்தரவு இந்த வாதிகளுக்கு எப்போது சார்பு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும். பி.வா.சா.ஆ. 6 என்ன ஆவணம் என்றால் M.P. 2/2012 ல் ஏற்பட்ட உத்தரவிற்கு மேல் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதியால் எங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் மற்றும் அந்த சீராய்வு மனுவின் நகல். பி.வா.சாஆ. 8 உத்தரவை நாங்கள் பெற்றவுடன் தாவா சொத்தின் சுவாதீனத்தை எடுக்க முயற்சி செய்தோமா என்றால் ஆமாம். எத்தனை நாளுக்குள் முயற்சி செய்தோம் என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும். உதவி ஆணையர், இந்து அறநிலையத் துறை, நாகர்கோவில் அவர்களால்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. உதவி ஆணையர், இந்து

அறநிலையத் துறை, நாகர்கோவில் அவர்கள் இணை ஆணையர், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பிய பி.வா.சா.ஆ. 7 கடிதத்தில் O.S. 537/2002 வழக்கு பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. O.S. 537/2002 வில் ஏற்பட்ட தீர்ப்புக்கு விரோதமாக தாவா சொத்தின் சுவாதீனத்தை எடுக்க நாங்கள் முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 8 உத்தரவில் இந்த வாதிக்கு சொத்தின் சுவாதீனத்தை கொடுப்பதற்கு 15 நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 8 ஆவணத்தின் முதல் பக்கத்தில் உதவி ஆணையர் நாகர்கோவில் நாள் நிர்ணயம் செய்து உடன் திருக்கோவில் சொத்தினை சுவாதீனம் பெற தேவையான விரைவு நடவடிக்கை மேற்கொள்ளவும் என 31.03.2022 அன்று 3 ஆம் பிரதிவாதியான இணை ஆணையர் / செயல் அலுவலர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த மேற்குறிப்பு எழுதி கையொப்பம் செய்துள்ள அதே நபர்தான் பி.வா.சா.ஆ. 9 ஆவணத்திலும் மேற்குறிப்பு செய்துள்ளாரா என்றால் இல்லை. அது வேறு நபர். மாவட்ட ஆட்சியரிடமிருந்து எங்களுக்கு கிடைக்கப் பெற்ற 12.01.2012 தேதியிட்ட பி.வா.சா.ஆ. 10 கடிததத்தில் வழக்கு O.S. 537/2002 க்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றுதான் கேட்கப்பட்டுள்ளது என்றாலும் எங்களுடைய ஆட்சேபனை எதுவும் கேட்கவில்லை என்றாலும் சரிதான். அந்த கடிதத்திற்கு பதில் எதுவும் அனுப்பப்பட்டதா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ. 11 ஆவணத்திலும் அதே போலதான் எங்களிடம் ஆட்சேபனையோ, மறுப்போ, ஆவணங்களோ கேட்கவில்லை என்றால் சரிதான். அந்த கடிதத்தின் தேதி 05.03.2012. அந்த கடிதத்திற்கும் நாங்கள் எந்த பதிலும் கொடுத்தோமா என்று

தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ. 10 மற்றும் 11 கடிததங்களில் 02.01.2012 தேதியிட்ட அகஸ்தீஸ்வர வட்டாட்சியர் அவர்களின் கடிதத்தை பார்வையில் காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். அது என்ன கடிதம் என்று தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும். அந்த 2 கடிதங்களுக்கு பிறகு நாங்கள் 09.10.2012 அன்று வாதிக்கு அனுப்பி ய கடிதம் வா.சா.ஆ. 25 என்றால் சரிதான். வட்டாட்சியர் விசாரணை செய்து, மாவட்ட ஆட்சியர் உறுதி செய்து வாதிக்கு பட்டா கொடுப்பதற்காக எங்களிடம் O.S. 537/2002 தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு இருக்கிறதா என கேட்டப்போது எங்களுக்கும், வாதிக்கும் இடையே வழக்கு இருப்பதாக காட்டுவதற்காக வா.சா.ஆ. 25 ஆவணம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்களிடம் உள்ளதாக சொல்லும் வருவாய் துறை ஆவணங்களில் சொத்தின் எல்லைகள் இருக்குமா என்றால் இருக்காது. வா.சா.ஆ. 25 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை எதிலிருந்து எடுத்தோம் என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்ல முடியும். வா.சா.ஆ. 25 ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள எல்லைகள் வாதி தாக்கல் செய்த O.S. 537/2002 லிருந்து எடுத்துப் போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 25 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுள் ஏதாவது ஒரு எல்லை பகவதியம்மன் கோவில் என இருக்கிறதா என்றால் இல்லை, கோவில் ரோடு என்று உள்ளது. வா.சா.ஆ. 25 ல் வாதியின் சொத்து கோவிலின் நான்காம் பிரகாரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, கோவில் ரோடுதான் நான்காம் பிரகாரம். பி.வா.சா.ஆ. 8 உத்தரவில் 3 வது பத்தியில் எதிர்மனுதாரரின் வாதியுரையை கேட்டு அல்லது எதிர்மனுதாரரின்

ஆவணங்களை பரிசீலித்து அந்த உத்தரவு பிறபிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 3 வது பக்கத்தில் 2 பத்தியில் 3 வது வரியில் தபசில் நிலத்தை உதவி ஆணையர் 24.02.2018 அன்று பார்வையிட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2018 ல் சொத்தை பார்வையிட்டு 2012 லிலேயே அறிக்கை தாக்கல் செய்ததுபோல குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிக்கை தீர்ப்புக்கு முன்னதாக இடைச்சொருகலாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 8 உத்தரவில் எல்.ஆர். பாலசுப்பிரமணியன் என்பவர் O.S. 537/2002 ல் கொடுத்த சாட்சியத்தை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த எல்.ஆர். பாலசுப்பிரமணியம் உயிருடன்தான் இருக்கிறார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவர் உயிருடன் இருந்தும் M.P. 2/2012 ல் நாங்கள் விசாரிக்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வேலாயுதன் தம்பியிடமிருந்து வெங்கடாச்சல ஐயருக்கு கிரயம் கொடுக்கப்பட்ட வா.சா.ஆ. 5 கிரய ஆவணம் ஏற்பட்ட 20.02.1972 அன்று வெங்கடாச்சல ஐயர் தாவா சொத்தில் வேத பாடசாலை நடத்தி வந்தார் என்று சொல்கிறேனா என்றால் ஆமாம். O.S. 537/2002 வழக்கு மீது மேல் முறையீடு செய்துள்ளோமா என்றால் இல்லை. O.S. 537/2002 வில் ஏற்பட்ட வா.சா.ஆ. 23 தீர்ப்பில் பத்தி 12 ல் பிரதிவாதிகள் தரப்பில் வெங்கடாச்சலம் ஐயருக்கு பட்டிகை சொத்தை வேத பாடம் சொல்லி கொடுப்பதற்காக மட்டும் வழங்கப்பட்டது என்று தெரிவித்தாலும் மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். ஆனால் அதன்பிறகு அந்த தீர்ப்பில் சட்டப்படிதான் அவரை வெளியேற்றுவதற்கு சட்டப்படியான

முறையை பின்பற்றிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 11 மற்றும் 25 ஆவணங்கள் ஒரே காரணத்திற்காக மட்டும்தான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 11 ஆவணம் எதற்கு கொடுக்கப்பட்டது என்றால் சர்வே எண். 678/41 ல் 0.14.5 ஏர் இடம் கோவிலுக்கு சொந்தமானது என்று கூறி சொத்தை திருக்கோவிலுக்கு ஏற்பிக்கும்படி கோரி வெங்கடாச்சல ஐயருக்கு கோவில் மேலாளர் கொடுத்த கடிதம். வா.சா.ஆ. 25 ஆவணம் எதற்கு கொடுக்கப்பட்டது என்றால் அந்த சொத்தை குறித்து நீதிமன்ற உத்தரவு படி ஆக்கிரமிப்புதாரர்களை அகற்றுவதற்கு வாதிக்கு இணை ஆணையர் கொடுத்த அறிவிப்பு. வா.சா.ஆ. 11 மற்றும் 25 ஆவணங்கள் தாவா சொத்திலிருந்து வாதியை வெளியேற்றுவதற்கு கொடுத்த அறிவிப்பு என்றால் சரியல்ல. இரண்டும் வெவ்வெறு. வா.சா.ஆ. 11 மேலாளர் கொடுத்தது. வா.சா.ஆ- 25 பிரிவு 75 ன் கீழ் இணை ஆணையர் கொடுத்தது. W.P. 19271/2023 நடைபெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் W.P. 19271/2023 ல் ஏற்பட்ட உத்தரவு எந்த தேதியில் ஏற்பட்டதாக உள்ளது என்றால் 10.07.2023 ல் ஏற்பட்டதாக உள்ளது. இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1 ஆம் பிரதிவாதி R.P. 26/2022 நிலுவையில் இருக்கும்போதும், காவல் துறை உதவியுடன் தாவா சொத்திலிருந்து வாதியை வெளியேற்றி சுவாதீனம் எடுத்தோம் என்றால் உதவி ஆணையர் சுவாதீனம் எடுத்து எங்களிடம் ஒப்படைத்தார். அது எந்த தேதி என்றால் 14.07.2023. 10.07.2023 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் எங்களுக்கு எதிராக W.P. 19271/2023 ல் உத்தரவு வந்தவுடன் அந்த இயலாமையை

காட்டுவதற்காக காவல் துறையை வைத்து வாதி மீது காட்டி சுவாதீனம் எடுத்தோம் என்றால் சரியல்ல. 14.07.2023 அவ்வாறு சுவாதீனம் எடுத்தபோது 3 ஆம் பிரதிவாதியான இணை ஆணையர் / செயல் அலுவலர், மாவட்ட திருக்கோவில்கள் உடன் இருந்தாரா என்றால் இருந்தார். அதன்பிறகு என்ன நடந்தது என்று தெரியுமா என்றால் நீதிமன்றத்திலிருந்து கட்டிடத்தின் சீல்லை அகற்ற சொல்லி உத்தரவு வந்தது. அதன்படி சீல்லை அகற்றி வாதியிடம் சொத்தை மீண்டும் ஒப்படைத்துவிட்டோம். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அந்த உத்தரவுபடி சீல்லை அகற்றிவில்லை என்றாலும் அந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்தோம் என்றாலும் அந்த மேல்முறையீட்டில் ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில்தான் சீல்லை அகற்றி சொத்தை வாதியிடம் ஒப்படைத்தோம் என்றாலும் சரியல்ல. அவ்வாறு சீல்லை அகற்ற சொல்லி இடப்பட்ட உத்தரவு 24.07.2023 அன்று W.P. (MD) No. 17741/2023 ல் உயர்நீதிமன்ற மதுரை கிளையினால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து 3 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த W.A. MD No. 1317/2023 ல் இடப்பட்ட 14.08.2023 தேதியிட்ட உத்தரவைதான் நாங்கள் பி.வா.சா.ஆ. 16 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இதுபோல வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது வாதியிடமிருந்து சொத்தின் சுவாதீனத்தை எடுத்துள்ளோம் என்றும் மேலும் தாவா சொத்திற்கு முன்னால் தடை ஏற்படுத்தும் விதமாக கட்டிடங்களை கட்ட முயற்சித்தோம் என்றாலும் இது போன்ற நடவடிக்கைகளால் தொடர்ந்து எங்களிடமிருந்து வாதிக்கு

தாவா சொத்து குறித்து அச்சுறுத்தல் இருந்து கொண்டே இருந்தது என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.